Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 31 ( 13 - 05 - 1992 ) புதன்கிழமை ஓசை: 85

## ஆசியாவில் எயிட்ஸ் தீவிரமாகப் பரவுகிறது

உலகின் எந்தவொரு பகுதியிலும் இல்லாதவாறு 'எயிட்ஸ்' என்னும் உயிராபத்து விளைவிக்கும் பயங்கர நோய் ஆசியா முழுவதும் அதிதீவிரமாகப் பரவுவதாக கொமன் வெல்த் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளை நாம் அண்மிக்கும் போது எயிட்ஸ் நோயாளர்கள் ஆசியாவில் அதிகளவில் இருப்பார்கள் என அண்மையில் நடாத்தப்பட்ட கணக்கெடுப்புகள் கூறுகின்றன. இதுபற்றி கொமன்வெல்த் நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு அண்மையில் நடைபெற்றபோது கொமன்வெல்த் செயலாளர் நாயகம் ஏமெகா அன்யா ஓ தெரிவித்தார்.

## செட்டிகுளத்தில் மின்வேக அதிரடி

# பத்து இராணுவத்தினர் பலி

# ஆறு காவலரண்கள் தகர்ப்பு

### 'குமண'வில் தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் தபால் பொதிகளுடன் குமண கப்பல் இன்று பருத்தித்துறை இறங்கு துறையை வந்தடையும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்று வரும் கப்பலில் 425 மெற்றிக் தொன் அரிசி, 1400 மெற்றிக் தொன் மா. 100 மெற்றிக் தொன் பால் மா. 1150 மெற்றிக் தொன் சீனி ஆகிய உணவுப் பொருள்களும் மற்றும் 271 தபால் பொதிகளும் வரவுள்ளன.

இதே வேளை எஞ்சிய இடத்திற்கு கால் நடைகளுக்கான தீனிகளும் நீர் இறைக்

[ 4ஆம் பக்கம் பார்க்க]

### பயிலுநர் ஆசிரியர் போட்டிப்பரீட்சை

[யாழ்ப்பாணம்]

பயிலுனர் ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் இருபதாம் திகதி நடைபெறவுள்ளது.

ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பதவிக்காகவே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. தற்போது இப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் விரைவில் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### நீர்கொழும்பு பகுதியில் 28 தமிழர் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியில் கடந்தவாரம் வரை 28 தமிழர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நீர்கொழும்பில் களனி பொலிஸ் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக சிறிலங்கா பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இப்பகுதியில் தேடுதல் நடாத்தவென இரு புலனாய்வு பிரிவுகளை சிறிலங்கா பொலிசார் அண்மையில் அமைத்துள்ளமை தெரிந்ததே.

### புலிகளின் மற்றுமோர் வீரசாதனை

(வவுனியா)

செட்டிகுளம் - முதலைக்குட்டி தொடர்காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக மின்னல்வேகஅதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். ஆறு காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டன. இத் தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்; பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

நேற்று அதிகாலை 2.55 மணியளவில் இவ்மின்னல்வேக அதிரடித் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர். ஐந்து நிமிடம் மட்டுமே இத் தாக்குதல் இடம் பெற்றது.

இத் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் நடந்த இரு தாக்குதல்களில் 25 க்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இனப்பிரச்சினைத் தீர்வு வழுக்கு மரம் போன்றது

--அமைச்சர் தொண்டமான்

[கொழும்பு]

''தமிழ் மக்களுக்கு பல குறைபாடுகள் இருந்து அவை மேல் மட்டத்தில் தீர்க்கக் கூடியதாக இருந்தாலும், அடிமட்டத்தில் அது முடியாததாக இருக்கிறது. சாமிவரம் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்க மறுப்பது போல இதனை சரிசெய்ய நடைமுறையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன.''

இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், கிராமிய அபிவிருத்தித் துறை அமைச்சருமாகிய எஸ். தொண்டமான் கொழும்பில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவின் நான்காம் நிகழ்ச்சியில் பேசும் போது தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்;

தமிழ் - சிங்கள புது வருட விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான பரிசை எடுக்க மரம் ஏறி பின்னர் வழுக்கி கீழே வருவதனைப் போன்றதே இதுவாகும். எனினும் நாம் தன்னம்பிக்கையை விட்டுவிடாமல் செயல் படவேண்டும்.

தமிழ் மக்களின் குறைகளை நிறைவு செய்யும் விதத்தில் நான் பாடுபடுவேன். நாம் அஞ்சி அஞ்சி வாழத் தேவையில்லை தலை நிமிர்ந்து வாழுவோம் என்றும் தொண்டமான் தனதுரையில் குறிப்பிட்டார்.

### தமிழர்களின் போக்கு இனவாதமல்ல

- அஷ்ரப்

(அட்டாளைச்சேனை)

பல்லின மொழி, மதங்கள் உள்ள நாட்டில் ஒரு குறிப்பிட்ட இனத்தின் நலன்கள் அபிலாசைகளை நிறைவேற்றப் பாடுபடுவது இனவாதமாகாது. தமிழர்கள் உரிமைகளைப் பெறுவதற்கு, அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயல்வதும் இனவாதமல்ல என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அட்டாளைச்சேனையில் கல்விக் கல்லூரி திறப்புவிழாவில் உரையாற்றிய அஷ்ரப் இதனைத் தெரிவித்தார்.

### புலிகளால் செட்டிகுளத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

செட்டிகுளம் முதலைக்குட்டி என்ற இடத்தில்இருந்த சிறிலங்கா இராணுவத்தினரது ஆறு காவல் அரண்கள் தாக்கி அழிக்கப்பட்ட போது

- ★ ஏ. கே. கோல்சர் - 14
- ★ எஸ். எல். ஆர். மகசீன் - 9

### சுன்னாகம் மயானத்தில் இனந் தெரியாத சடலம்

[யாழ்ப்பாணம்]

### சுதந்திரக் கட்சிக்குள் அதிகாரப் போட்டி

(கொழும்பு)

ஹெல உறுமய குழுவினர் ... தூண்டிவிட முயல்கின்றது. சென்ற வியாழக்கிழமை இந்

[யாழ்ப்பாணம்]

இனந் தெரியாத ஆணின் சடலம் ஒன்று சுன்னாகம் மயானத்தில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து கண்டெடுக்கப் பட்டிருக்கின்றது

சுமார் 40 வயது மதிக்கத் தக்க இந்தஆணின் சடலத்தை தமிழீழக் காவல்துறையினர் எடுத்து வந்து யாழ் போதனா மருத்துவ மனையில் ஒப்படைத்திருக்கின்றனர். இந்த வைத்தியசாலையின் பிரேத கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் இச்சடலம் நேற்று நள்ளிரவு வரை அடையாளம் காணப்படவில்லை. (க)

# புலிகள் விவகாரத்தில் இந்தியாவின் இறுமாப்பு

## முன்னாள் தளபதிகள் கண்டனம்

[டில்லி]

''சிறிலங்கா நெருக்கடி'' என்ற தலைப்பில் இரு இந்திய இராணுவ தளபதிகள் வெளியிட்டுள்ள நூல் ஒன்றில் விடுதலைப்புலிகள் சம்பந்தமாக இந்திய பாதுகாப்பு அமைச்சு கடைப்பிடித்த கொள்கையை பலமாகக் கண்டித்துள்ளனர்.

''அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளை இந்திய சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஏன் அழைக்கவில்லை என்ற ஒரு கேள்வி எழுகிறது எம்

(4 ஆம் பக்கம் பார்க்க)


செஞ்சோலை சிறுவர் இல்லவளர்ச்சிக்கான நிதி சேகரிப்பிற்காக

செஞ்சோலைக் குழந்தைகளுடன் புகழ்பெற்ற கலைஞர்களும் இணைந்து வழங்கும்

"சப்தஸ்வராவின்"

இசைமாலை இன்னிசை நிகழ்ச்சி

யாழ். குடாநாடெங்கும் விரைவில் நடாத்தப்பட இருக்கின்றது.

குழந்தைகளின் உணர்வினைப் பிரதிபலிக்கும் உணர்வுமிக்க இனிய, புதிய பாடல்கள்

சமூக அவலங்களால் பராமரிப்பின்றித் தவித்த குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு ஒளியூட்ட உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள் உங்கள் பங்களிப்பு மேலும் பல குழந்தைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். (2567)


## வீரச்சாவு

### வீரவேங்கை துரோணன்

செட்டிகுளம் முதலைக்குட்டி சிறிலங்கா காவலரண்கள் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரமான அதிரடி தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கை துரோணன் (செவஸ்ரின் - தளையசிங்கம் நேசானந்தராசா, சுதந்திர

[4 ஆம் பக்கம் பார்க்க]

தாக்கி அழிக்கப்பட்டபோது அங்கிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நவீனரக ஆயுதங்கள் வருமாறு.

★ ரி 56-2ரக துப்பாக்கிகள் - 3
★ ரி 56 புதிய ரகத் துப்பாக்கிகள் - 2
★ ரி 56-1 ரகத் துப்பாக்கிகள் - 2
★ ரி 81ரகத் துப்பாக்கி - 1
★ எஸ். எல். ஆர். ரகத் துப்பாக்கிகள் - 3
★ 303 ரகத் துப்பாக்கிகள் - 2
★ ரி 81 மகசீன் - 7
★ ரி 56 மகசீன் - 25
★ 303 மகசீன் - 1
★ நடுத்தர ரவைகள் -1253
★ நேற்றோ ரவைகள் - 212
★ 303 ரக ரவைகள் - 71
★ ஜெ ஆர். கைக்குண்டு- 2
★ ரி. என். ரி கைக் குண்டுகள் - 5
★ பொரின் குண்டு - 4
★ ரி 81 றைபில் கிரனைட் - 1
★ சப்பாத்து சோடி - 7
★ றெயின் கோட் - 2
★ கிட்பாக் - 8
★ தண்ணீர் கான் - 2
★ தலைக்கவசம் - 4
★ மில்ரி பெலிட் - 1
★ வெடிக்கவைக்கும் கருவி - 2

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரபீடத்தைப் பிடித்து விடுவார்களோ என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை அஞ்சுகின்றது.

இந்தக்குழு இனவெறியைத் தக் குழு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிக்கலான நிலையில் உள்ளார் என்றும் சில எம். பிகள் தெரிவித்தார்கள்.

# தமிழ் மக்களின் அவலங்களை பிக்குகள் தரிசிக்கவில்லை

## குருநாகல் ஆயர் றேமன் பீரிஸ் ஆண்டகை

(குருநகர்)

''வடபகுதிக்கு வந்த பிக்குகள் தமிழ் மக்களின் அவலங்கள், கஷ்டங்கள் நிறைந்த வாழ்க்கையைத் தரிசிக்கவில்லை. அரசு, படைகளின் உதவியுடன் வடபகுதிக்கு வந்து சென்ற அவர்களால் தமிழ் மக்களின் எதார்த்த வாழ்க்கை புலப்படாதது விந்தை அல்ல-''

யாழ். ஆயரின் முப்பெரும் விழாவுக்கு வருகை தந்துள்ள குருநாகல் மறை மாவட்ட ஆயர் அதி வண. றேமன் பீரிஸ் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று (12-5-92) நண்பகல் யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்றத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு உறுப்பினர்களுடன் உரையாடுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இவருடன் பேராயர் வண

(4 ஆம் பக்கம் பார்க்க)

உலக தமிழ் மக்கள்

# புலிகளை ஆதரிக்கும் போது நாம் ஏன் ஆதரிக்கக்கூடாது?

## - டாக்டர் ராமதாஸ் கேள்வி

(மதுரை)

உலகில் 30 நாடுகளில் தமிழர்கள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளிலுள்ள தமிழர்கள் விடுதலைப்புலிகளை தீவிரமாக ஆதரிக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் மாத்திரம் புலிகளை ஆதரிக்கக் கூடாது என்பது எப்படி சரியாகும்? என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; விடுதலைப்புலிகளுக்கு எல்லா வகையிலும் ஆதரவாக இருப்போம். எந்த தியாகமும் செய்வோம் விடுதலைப் புலிகளை மத்திய அரசு தடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 1990-91 கல்வியாண்டு

# யாழ்.பல்கலைமாணவருக்கு மகாபொல கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 1990-91 கல்வியாண்டு மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்குரிய அடிப்படைத் தகுதிகள் இருந்தும் கிடைக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

மாணவர்களினால், உரிய காலத்தில் அனுப்பப்பட்ட மகாபொல புலமைப்பரிசில் விண்ணப்பப் படிவங்கள் சில இதுவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு போய் சேரவில்லை யென தெரியவந்துள்ளன.

இதனால் மாணவர்கள் இது குறித்து பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகரிடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் ஒரு சுவிஸ் பிரஜை பொலிசாரால் கைது

(கொழும்பு)

ஜா - எல வீட்டிலிருந்து நவீன ஆயுதங்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது சம்பந்தமாக இன்னொரு சுவிஸ் பிரசை கைதாகியுள்ளார்.

பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும் முதலாவது சந்தேக நபரை இவர் சந்தித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை சுங்கப் பரிசோதனையைத் தாண்டி ஆயுதப் பெட்டிகள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன என்பது பற்றி சுங்க உயர் அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

# வீரமுனை கிராம மக்கள் மீண்டும் அகதி முகாமில்

(மட்டக்களப்பு)

வீரமுனையில் கட்டாயப் படுத்தி குடியேற்றப்பட்ட தமிழர்கள் சிங்கள,முஸ்லிம்காடையர்களின் அச்சுறுத்தல் காரணமாக மீண்டும் அகதி முகாம்களுக்குத் திரும்பிவிட்டனர்.

கடந்த மாதம் அகதி முகாம்களில் தங்கியிருந்த 150 தமிழ் குடும்பங்கள் பலாத்காரமாக வீரமுனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு குடியேற்றப்பட்டமை தெரிந்ததே.

எவ்வித வசதிகளுமற்றநிலையிலுள்ள வீரமுனைக் கிராமத்தில் சிலகொட்டில்கள் மட்டும் அமைக்கப்பட்டு இவர்கள் குடியமர்த்தப்பட்டனர். சுற்றிலும் சிங்கள முஸ்லிம் குடியேற்றங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சங்கீதம் வினாவிடை

சங்கீதம் வினாவிடை தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டுகளிலும் வட இலங்கைச் சங்கீத சபையின் 2 ஆம் தரம் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. நடுவுத் துருத்தி நல்லூர்ச் சந்தை வெளியீடு: கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6250)

### தேவை

நல்ல நிலையிலுள்ள சொப்பர் சைக்கிள் தேவை. 6, சங்கிலியன் வீதி, நல்லூர் என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(2566)

### நிர்வாகிகள் தெரிவு

பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் இடம் பெற்றபோது இரவீந்திரதாஸன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். உபதலைவராக இரத்தினசபாபதியும், மற்றும் இணைச் செயலாளர் உட்பட ஏழு பொறுப்பாளர்களும் பதின்மூன்று அங்கத்தினர்களைக் கொண்ட நிர்வாக சபையும் இங்கு தெரிவு செய்யப்பட்டது.

### ஆய்வுகூடஉதவியாளர் தேவை

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்திருப்பது அவசியமாகும். விண்ணப்பங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சி4406

## இரிக்கட் முடிவுகள்

(நமது நிருபர்)

டொனால் கணேஸ்குமார் வெற்றிக் கேடயத்திற்காக கடந்த ஞாயிற்றுகிழமை நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் போட்டியில் தெல்லிப்பளை கிறிஸ்கொப்பஸ் அணி யாழ்பல்கலைக் கழக அணியை 63 ஓட்டங்களால் வெற்றி பெற்றது,

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறிஸ் கொப்பஸ் அணி 47 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றூபராஜ்27, விஜய குலன் 61, கிருபாகரன் 36, சிறிதரன் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப் பெற்றனர்,

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 41 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் திலகராஜ் 36, விவேகானந்தன் 32, அகிலன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களுக்கு எதிராகப் பந்து வீசிய விஜயகுலன் சிறிதரன் ஆகியோர் முறையே 4, 3 விக்கட்டுக்களை வீழ்த்தினார். போட்டியில் சிறந்த ஆட்டக்காரராக இ. சிறிதரன்தே தேர்ந்தெடுக்கப்பட்டார்

(ச.)


COMPUTER PROGRAMMING
IN
BASIC LANGUAGE

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம் : 16 - 05 - 1992
8.30 மணி

Lectures By S.P. SIVAPATHASUNDARAM
M. I. D P. M. (Lond)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சிமுடிவில் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்

C.I.M.A. Stage I, I. A. B. (All stages)
விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
( Pioneers in Computer Education )
16, 3rd CROSS STREET, JAFFNA. (சி/4406)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### புதிய பாடத்திட்டம் கிடைக்கவில்லை

## மாணவர் சித்திர பாடத்தில் சித்தியடைய முடியவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில்வெளியான 1990ஆம் ஆண்டு க. பொ.த. (சாதாரண) விசேட பரீட்சை முடிவுகளில் பல மாணவர்கள் சித்திரப் பாடத்தில் சித்தியடையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. வடபகுதி பாடசாலைகளுக்கு கடந்த மூன்று வருடங்களாக சித்திரப்பாடப் புதிய பாடத்திட்டம் வழங்கப் படாததால் மாணவர்பலர்அப் பாடத்தில் சித்திபெற முடியவில்லை என்று அதிபர்கள் கூறுகிறார்கள். மேலும் சித்திர வினாத்தாளில் இருந்த கேள்விகள் பெரும்பாலும் சிங்கள சித்திர முறையைப் பின் பற்றியே அமைந்திருந்தன.

நல்ல பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களில் சிலரும் இப் பாடத்தில் சித்தியடைய முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னணிப் பாடசாலைஒன்றில்அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களில் சிலர் எட்டாவது பாடமான சித்திரத்தில்சித்தியடையவில்லை எனப்பரீட்சைப்பெறுபேறுகள் தெரியப்படுத்துகின்றன.

சித்திரப் பாடத் திட்டத்தைப் பெறுவதற்கு பல முறை உரிய அதிகாரிகளை அணுகியும் தமது முயற்சிகள் பலன் தரவில்லை என அதிபர்கள் தரப்பில்கூறப் படுகிறது. அதிகாரிகளின் அசிரத்தை தான் இதற்குக் காரணம் என்று தனது பெயரை வெளியிட விரும்பாத முன்னணிப் பாடசாலைஒன்றின் அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை அன்றுகூடிய அதிபர்கள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் குழு நேரடியாகத்தானே பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு சித்திரத்திற்கான பாடத்திட்டத்தைப் பெறுவதென்று முடிவு செய்துள்ளது

## முல்லைத்தீவு மீனவர்கள் இராணுவத்தால் கைது

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளி வாய்க்காலில் இருந்து கடல் தொழிலுக்குச் சென்ற இரண்டு பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கடலில்வைத்து கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த ஒன்பதாம் திகதி இடம் பெற்றுள்ளது இந்தமீனவர்களின் நிலை குறித்து எதுவும் தெரியவரவில்லை.

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் முடிவுகள் வெளிவந்தன

(யாழ்ப்பாணம்)

1991ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணதர) விசேட பரீட்சையின் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சைமுடிவுகளும் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம்யாழ் கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

இப் பரீட்சைக்கு தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (பா).


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

14 00/- (மாதம் ஒன்றுக்கு)

(2) சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம் 11:
ரூபா 8 000 - 5 X 250 -9,250/-(மாதம் ஒன்றுக்கு)

(3) உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதம் ஒன்றுக்கு(நிலையானது)

(4) தற்காலிகசெய்முறை காட்டுநர்:
3,250/- மாதமொன்றுக்கு (நிலையானது)

பேராசிரியர்பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி


## 'துலங்கல்' சஞ்சிகை இன்று வெளியாகின்றது

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் கல்விக்கழகத்தின் "துலங்கல்" சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று புதன் கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

தொழிலாளர் கல்விக்கழகத் தலைவர் க.பரராசசேகரன் தலைமையில் நடைபெறும் இவ் வெளியீட்டுவிழாவில் மங்களவிளக்கேற்றல் பேராசிரியர் அ. துரைராசா, வாழ்த்துரை பேராசிரியர். பொ. பாலசுந்தரம் பிள்ளை-சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி, சஞ்சிகை வெளியீடு திரு. செ. செல்லராசா. கருத்துரை பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம், பதிலுரை திரு. மா. மகேஸ்வரன். நன்றியுரை திரு. செ. நாகராஜா ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளாக புரட்சிப்பாடல்கள் மற்றும் யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவான "விடியப் போகிறது" எனும் நாடகமும் இடம் பெறும்.

## உதைபந்தாட்டப் போட்டி யுத்காமல் அணி வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

மாவீரர்கள் ஞாபகார்த்தமாக குருநகர் சென்றோக் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் சென்றோக் விளையாட்டரங்கில் இடம்பெற்ற இரு போட்டியில் குருநகர் யுத்காமல் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய றிங்கோ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை 9 - 2 கோல்களால் தோற்கடித்தது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இன்னொரு போட்டியில்றோயல் வி. கழக அணி வைக்கிங்ஸ் வி. க. அணியை 2 - 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டியது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக என். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை எஸ். புலேந்திரன், என். ஜஸ்ரின் ஆகியோர் கடமையாற்றினார்கள். (42)


தொழிநுட்பக் கல்லூரி - இறுதிப் பரீட்சை
1989 / 1990 / 1991


டீ/118 - கணக்கியலிலான உயர் தேசிய டிப்ளோமா (H. N. D. A.) பரீட்சை
4-ம் வருட நேரசூசியில் மாற்றம்

மேற்படி பயிற்சி நெறிக்குரிய நேரசூசி பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| திகதி | பாடம் (நேரம் 13.00 மணி முதல் 16.00 மணி வரை) |
|---|---|
| 18-05-92 | 535 — கணக்காய்வு |
| 19-05 92 | 536 — வரிவிதிப்பு |
| 20-05-92 | 533 — தீர்மானக் கணக்கியல் - I |
| 21-05-92 | 534 — தீர்மானக் கணக்கியல் - II |
| 25-05-92 | 537 — கூட்டுத்தாபனச் சட்டம் ( Corporation Law ) |
| 26-05-92 | 538 — பொருளியல் |

அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி, [சி/4408]
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



## கப்டன் கரேந்திரன்

(செல்வவிநாயகம் ஞானசேகரன்)

தாயவளின் மடியினுக்கு: 13-12-1967

தமிழீழ விடிவினுக்கு: 13-05-1988

பறிபோகும் எம் தேசத்தை மீட்கவே
திருமலையிலே உன் முதற்களத்தைத் தொடங்கினாய்
எமை அடக்க வந்த இந்தியனுக்கு
நாம் ஒரு கொத்தடிமை இல்லை எனபாடம் புகட்டினாய்!
நீ கண்ட தமிழீழ கனவுடனே கண்களை மூடினாய்
உன் இலட்சியங்களை நாம் மறக்கவில்லை.
உன் கனவுகள் நனவாகும் வரை தொடர்வோம் பயணத்தை
வெல்க புலிகள்! மலர்க தமிழீழம்!

ஞானசேகரன் வீதி,
நெடியகாடு, வல்வெட்டித்துறை. (2535)

அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உறவினர்கள், நண்பர்கள்

---

னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. பயிராக்கவியல் / விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல்/ விவசாயப் பொறியியல்/மிருகவிஞ்ஞானப் பேராசிரியர்.
2. பயிராக்கவியல் / விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல்/ விவசாயப் பொருளியல்/ விவசாயப்பொறியியல் / மிருகவிஞ்ஞானத்தில் - சிரேட்டவிரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. சித்த மருத்துவத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்(தகுதிகாண்)
4. பயிராக்கவியல் / விவசாய உயிரியல் / விவசாயஇரசாயனவியல்/ விவசாயப் பொறியியல் / மிருக விஞ்ஞானம்/விவசாயப்பொருளியலில் தற்காலிகச் செய்முறைகாட்டுநர்.

துறைத்தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டு காலத் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்துள்ளாரென உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண்) என பதவிப் பெயர் அளிக்கமுடியும் என்பதுடன், துணைவேந்தரால் மாதம் ஒன்றுக்கு 4500 - 10 X 200 - 6500/- சம்பள அளவுத்திட்டத்திலும் வைக்கப்படுவர்.

### சம்பள அளவுத்திட்டம்

(1) பேராசிரியர்:
ரூபா 12.200-6X300-

பேராசிரியர்பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1992 07.24 ஆகும்.

ஏனைய பதவிகளுக்கு முடிவுத்திகதி1992.06.22 ஆகும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல்வேண்டும்.

தபால்மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 X 10 சதம மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை யொட்டப் பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992.05.08. (சி4404)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1992-05-13

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமினுள் கொண்டு செல்கையில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**பணக்காரன்| அமல்** (மிக்கேல்பிள்ளை அமலதாஸ்-89,புதியகடற்கரை வீதி,குருநகர்,யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு விழுப்புண் அடைந்து யாழ்-மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய -

**சுமன்** (திருக்கோணமலை)

மட்டக்களப்பு, காயங்கேணிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலைசெய்யப்பட்ட

**சாபீர்** (சரிபுதீன்சாபீர் - தியாவெட்டுவான், மட்டக்களப்பு)

வெற்றிலைக்கேணியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கரேந்திரன்** (செல்வவினாயகம் ஞானசேகரன் - ஞானசேகரன்வீதி, நெடியகாடு, வல்வெட்டித்துறை)

1989 ஆம் ஆண்டு சுன்னாகத்தில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட

★ **முத்துக்குமாரு** (கோபாலகிருஸ்ணன் ; உடுவில் கிழக்கு, உடுவில்)

மணலாறு-நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட 'அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட 9 தமிழர்கள் - மற்றும், கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துப்படுகொலை செய்யப்பட்ட ; நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவன்.

1990 ஆம் ஆண்டு மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப் பிரிந்த

**உஷா** (பாலச்சந்திரன் - நாராந்தனை, ஊர்காவற்றுறை)

**ஆகியோரை இந்நாளில்.
நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அத்துடன்இணைந்துசெயற்பட்டவராவர்-

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4405)

சிந்தனைக்கு

நாடுகள் தங்கள் வலக்கரங்களை உயர்த்தி சுதந்திரத்தைச் சூளுரைக்கும்.
—ஜான் விட்டியர்

ஈழநாதம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 13-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
அ. பெ. எண் [illegible]

## போர் தத்துவங்களில் புதிய அத்தியாயங்கள்

''விடுதலைப் புலிகள் கையாளும் போர் உத்திகள் விதிமுறைப் புத்தகங்களில் கூட இல்லாதவையாக உள்ளன. வெற்றிகரமான விடுதலைப் புலிகளின் கண்டு பிடிப்புக்களுக்கு அவை உதாரணமாகவும் உள்ளன.'' இவ்வாறு போர்முனையில் அனுபவமுள்ள சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் போர்யுக்திகள், தந்திரங்கள் தனிச்சிறப்புப்பெற்றவை, தனித்துவமானவை என்பது இவ் வதிகாரிகளின் கூற்றிற்கு முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். விடுதலைப்புலிகளுடன் வன்னியிலும், கிழக்குக் காடுகளிலும், யாழ்ப்பாணத்துக் குச்சொழுங்கைகளிலும் போரிட்ட இந்திய இராணுவத்தினர் இதனை முன்னரே வெளிப்படையாகத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். இதேவேளை, இந்திய இராணுவ அக்கடமியில் 'அமைதிப்படையின்' போர் அனுபவங்கள் ஆய்விற்குரியதொன்றாக ஆக்கப்பட்டதில் இருந்தே விடுதலைப் புலிகளின் போர்முறைகள், யுக்திகள் என்பன புதுமையானவை, தனித்துவமானவை என்பதை எவரும் புரிந்துகொள்ளலாம்.

கெரிலாப் போருக்கு காடுகளும், மலைகளும் அத்தியாவசியமானவை எனக் கருதப்பட்ட வேளையில் நமீபியாவில் பாலை நிலப்பரப்பில் தமது விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த கெரில்லாப் போராளிகளிடம் ஒரு பத்திரிகையாளர் பாலைவன நிலப்பரப்பில் எவ்வாறு உங்களால் ஒரு கெரில்லாப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடிகின்றது? எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு ''ஒருதாய் தனது பிள்ளைகளுக்கான பாதுகாப்பையும், மறைவிடத்தையும் கொண்டிருக்கத் தவறமாட்டாள்'' எனப் போராளி பதிலளித்தார்.

அதாவது ஒவ்வொரு மண்ணும் தமக்கென ஒரு விசேட தன்மையைக் கொண்டிருக்கும். அதைத் தெளிவாக உணர்ந்து கொண்டவர்களே அந்த மண்ணின் மைந்தர்கள். அந்நியர்களினால் அதை உணர்ந்து கொள்ளமுடியாது. விடுதலைப்புலிகள் இம்மண்ணின் மைந்தர்கள். அவர்கள் தமது அன்னையின் அரவணைப்பைப் பெற்றுள்ளார்கள். சரியாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

உலகின் பல பாகங்களிலும் நடந்த நகரக் கெரிலாப் போர்முறைகள் தோல்வி கண்ட வேளையில், யாழ்ப்பாணத்தில் மட்டும் கெரிலாப் போர் முறை வெற்றி கண்டது. பல மில்லியன் கணக்கான மக்களைக் கொண்டதும் பெரும் தெருக்களைக் கொண்டதுமான நகரங்களில் வெற்றி கொடுக்காத போர்முறை சில இலட்சம் மக்கள் கொண்டதும் குச்சொழுங்கைகள் கொண்டதுமான யாழ்ப்பாண நகரத்தில் வெற்றி

# தென் தமிழீழத்தில் திணறுகின்றன சிறிலங்கா பாதுகாப்புப் படைகள்!

> விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரங்களை எந்த நூலிலும் காண முடியவில்லை என்று கூறும் போர் முனையிலுள்ள இராணுவ அதிகாரிகள், புலிகளின் போர் முறைக் கண்டு பிடிப்புகளுக்கு இவை உதாரணமாக விளங்குவதாகவும் கூறியுள்ளனர். ''கிழக்கில் இன்னமும் நெருக்கடிகள்'' என்ற தலைப்பில் 'ஐலன்ட்' வார இதழில் றோகான் குணசேகரா எழுதியுள்ள கட்டுரையிலிருந்து:

கடலிலும் தரையிலுமாக விடுதலைப்புலிகள் தமது ஆட்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையே நகர்த்த இன்னமும் வலிமைபெற்றவர்களாக இருப்பதால் கிழக்கில் விடுதலைப் புலிகளை ஒழிப்பது இன்னும் சிரமமாகவே இருக்கின்றது. பாதுகாப்புப் படைகளின் பலத்த முயற்சிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையேவிடுதலைப் புலிகள் நகர்வதையும், ஆயுத தளபாடங்கள் அளிக்கப்படுவதிலும் தடங்கல்களை ஏற்படுத்தியிருக்கின்ற போதும் முற்றாகத் தடுக்க முடியவில்லை.

போர்முனையின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஆட்பலத்தை அதிகரிப்பதற்காகவோ அல்லது இராணுவம் பலவீனப் பட்டிருக்கும் இடத்தில் தாக்குதல் நடத்துவதற்காகவோ பெரும் எண்ணிக்கையில் தமது ஆட்களை நகர்த்துவதற்கு அவர்கள் பெற்றிருக்கும் ஆற்றல் அவர்களது போராட்டத்திற்கு வெற்றியாகிறது.

பாதுகாப்புப் படையினரின் முன்னணிப் பாதுகாப்பு எல்லையானதுகஜபாகுபுரப் பகுதியிலிருந்து கொக்குத்தொடுவாய் ஈறாக உள்ள வடக்கு கிழக்கின் கடற்கரைப் பகுதியை கட்டுப்படுத்தக் கூடியதாக உள்ள போதிலும் விடுதலைப்புலிகள் சிறுசிறு குழுவினராக ஊடுருவல் செய்யக் கூடியதாகத்தான் இருக்கிறது.

சிறிய கண்ணாடி இழைப் படகுகள் மூலம் கடற்கரை ஓரமாக விடுதலைப் புலிகள் பயணம் செய்யும்போது கடற்படையின் வேகம் மிகுந்த படகுகளால் கூட அவற்றைக்கண்டறிய முடியவில்லை. சில சமயம் கடற்படையின் பீரங்கிக் கப்பல்கள் இப்படகுகளைக் கண்டறிந்தாலும் கூட கரைப் பகுதிவரை தொடர்ந்து துரத்திச் சென்று தாக்குவது இயலாததாக உள்ளது. கடற்படையினர் தாக்குகின்றார்கள் என்றால் விடுதலைப்புலிகள் தமது படகுகளை கரையில் ஏற்றிவிட்டு காடுகளுக்குள் புகுந்து மறைந்து கொள்கின்றனர். இப்பகுதியில் குடியிருப்பவர்கள் விடுதலைப் புலிகளுக்கோ அவர்களது இலட்சியங்களுக்கோ ஆதரவாக இருப்பவர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அடர்ந்த காடுகளைக் கொண்ட தனித்த கிராமங்களாக இருப்பதால் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்திற்கு தடங்கல் செய்ய முடியாதவர்களாகவே உள்ளனர். 1980 முதல் விடுதலைப் புலிகள் படிப்படியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் முதலில் சிங்களவர்களையும், பின்னர் முஸ்லிம்களையும் வெளியேற்றியதிலிருந்து இதனை உணர்ந்து கொள்ள முடியும்.

கிபுட்டிசம் ஸ்டைலில் அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதன்மூலம் பாதுகாப்பைப் பலப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்ச்சியான படுகொலைகளுக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதை கடந்த எட்டு ஆண்டுகளில் காணமுடியும். இக்குடியேற்றங்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட ஆயுதங்களை தாக்குதல் நடத்துபவர்கள் எடுத்துச் செல்வது இந்தச் சண்டை எப்படியான திசையில் போகிறது என்பதைக் காட்டும் சமிக்ஞைகளாகும். கிராமத்தைப் பாதுகாப்பதாகக் கூறியவர்கள் தீர்த்த வேட்டுக்களின் எண்ணிக்கை இதை மேலும் வெளிப்படுத்தும். சில வழிகளில் சிந்தித்துப் பார்த்தால் இது எவ்வளவு பலவீனமான இலக்கு என்பது தெரியவரும். பாதுகாப்பிற்காக இருப்பவர்கள் தாக்க வருபவர்கள் மீது பலத்த தாக்குதல் நடத்தக் கூடியதாக இருக்க வேண்டும். இதற்கு நல்ல பயிற்சியுடன் அருகில் இருக்கும் இராணுவ முகாமிலிருந்து உடனடி உதவியும் பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

கஜபாகுபுரவிலிருந்து கொக்குத்தொடுவாய் வரையிலான பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதன் மூலமும், பலமான பாதுகாப்பு அரண்களை நிறுவுவதன் மூலமும் வடக்கிலிருந்து கிழக்கிற்கும், கிழக்கிலிருந்து வடக்கிற்கும் விடுதலைப் புலிகள் போக்குவரத்து செய்வதைக் கட்டுப்படுத்த முடியும். அவ்வாறானால் விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளுக்காக இன்னும் மேற்கு நோக்கிப் போகவேண்டியிருக்கும். அங்கு வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அடர்த்தியான பெரிய காடுகளும் இல்லை என்பதுடன் குடியிருப்புகளும் நிறைந்துள்ளன. எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதனைக் கடப்பதற்கு அவர்கள் தயங்குவதில்லை என்பதுடன் எந்தச் சவாலையும் சந்திக்கத் தயாராகவுள்ளனர்.

கடந்த டிசம்பரில் கஜபாகுபுரவிலிருந்து கொக்குத்தொடுவாய் வரை ஒரு வீதியை அமைக்கவும், அதன்மூலம் போக்குவரத்து மற்றும் தொடர்புகளைப் பலப்படுத்தவும், காலப்போக்கில் குடியேற்றங்களை நிறுவவும் இராணுவம் திட்டமிட்டு இருந்தது. ஆனால் இந்த வீதி அமைப்பு வேலை இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. இத்தகைய குடியேற்றத் திட்டங்களை நிறுவுவதற்கு அரசின் அத்தனை ஏஜென்சிகளும் தமது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதுடன் தமிழ் ஈழக் கோரிக்கையாளர்களால் தவிர்க்க முடியாமல் எழுப்பப்படும் சினத்திற்கும் பதிலளிக்க வேண்டும்.

பாதுகாப்புக் காரணிகளின் நோக்கிலிருந்து அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டாலும் கூட விடுதலைப்புலிகளிடமிருந்து எந்தவொரு தாக்குதலும் நடைபெறாமல் காக்க வேண்டிய பொறுப்பு இராணுவத்திற்கு உண்டு. ஆழ குறைந்த கடற்பரப்பிலும் பயணம் செய்யக்கூடியதாகக் கடற்படையினர் இப்போது வாட்டர் ஜெட் புறப்பீல்ட் படகுகளைப் பயன்படுத்துவதால் ஆழம் குறைந்த கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் பிரசன்னத்தைக் கட்டுப்படுத்தக் கூடும்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் மீது சண்டை நடத்தும் அதேநேரத்தில் கிழக்கிலும், வன்னியிலும் ஆதிக்கத்தைச் செலுத்தக் கூடிய அளவுக்கு துருப்புக்கள் இல்லை என்பதுதான் படையினர் எதிர்நோக்கும் பிரச்சினையாகும். கிழக்கில் புலிகள் தொடர்ந்து நடத்தும் தாக்குதல்கள், தரைப் பகுதியின் கட்டுப்பாட்டைப் பேணுவது மற்றும் புலிகளின் உயரிய உத்திகள் பற்றிச் சில கருத்துக்களைத் தருகிறது.

போர்முனையில் ஈடுபட்ட படை அதிகாரிகள் இதுபற்றி பின்வருமாறு கூறுகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் இந்தப் போர் யுக்தி எந்த இராணுவத் தந்திரோபாயப் புத்தகங்களிலும் காணப்படாத ஒன்றாகும். U வடிவத்தில் மறைந்திருக்கும் புலிகள் பெருமளவு இராணுவத்தைக் கவர்ந்திழுத்து தாக்குதல் நடத்துகின்றனர். இந்தப் பொறிக்குள் அகப்படும் இராணுவத்தினர் தப்பி வருவது அரிதாகி விடுகிறது. தத்துவப்படி பார்த்தால் இரு மருங்கிலும் இருக்கும் ஒரே அணியைச் சார்ந்த வீரர்கள் தமது சகாக்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகக் கூடிய வாய்ப்பு அதிகமானதாகும். ஆனால் விடுதலைப்புலிகள் கவனமாகத் திட்டமிடுவதன் மூலம் இதனை லாபகமாகத் தவிர்க்கிறார்கள்.

ஒரு புறத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் வருவதாக நினைத்து எதிர்ப்புறத்தில் பாதுகாப்புத் தேட முற்பட்டால் அங்கிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும். இதேவேளை முன்புறமிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் வரும். இத்தகைய பொறியில் அகப்பட்டு விட்டால் அந்த இராணுவக் குழு பெரும் அழிவுகளைச் சந்திக்க வேண்டியதாகி விடும். இத்தகைய பொறியைத் தவிர்ப்பதற்குள்ள ஒரே ஒரு வழி பரந்தளவில் துருப்புகள் முன்னேறுவது மாத்திரமே.

# யூகோமுன்னாள் குடியரசுகளுக்கு இந்தியா ராஜீய அங்கீகாரம்

(டில்லி)

யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து சென்றுள்ள ஸ்லோவேனியா, குரோஸ்வியா, பொஸ்னியா மற்றும் கர்சகோவினா குடியரசுகளுடன் ராஜீயத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளப்போவதாக இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் எட்வாடோ பெலாய்ரோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய எட்வாடோ பெலாய்ரோ இதனைத் தெரிவித்தார்.

இந்த நான்கு நாடுகளின் சுதந்திரத்தை தாம் வரவேற்ப

## ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ஜேர்மன், ஜப்பானுக்கும் இடமளிக்கவேண்டும்

(புல்டன்)

- கொர்பசேவ்

ஐ. நா. விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும், ஜப்பானுக்கும், ஜேர்மனிக்கும் பாதுகாப்புச் சபையில் இட

கொர்பசேவ் புதிய சகாப்தத்தின் மலர்ச்சியைப் பிரகடனப்படுத்தி, உலக அரசாங்கம்

கொண்டதுமான யாழ்ப்பாண நகரத்தில் வெற்றி பெற்றது. புலிகளை பல ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியாமல் போனது. இதே போன்றே இந்தியாவிலுள்ள பெரும் அடர்ந்த காடுகளிலும், சாம்பல் நதிப்பள்ளத்தாக்குக் காடுகளிலும் புகுந்த இந்திய இராணுவத்தினருக்கு மணலாற்றுப் பரடடைக் காடுகள் சவாலாக நின்றன. பரட்டைக் காடுகள் தமது புதல்வர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன.

அன்னையின், இப்பாதுகாப்புடன் புலிகளின் துணிவும் அர்ப்பணிப்பும், இலட்சிய வேட்கையும் திறமையான போர் யுக்திகளும் எதிரிகளை எப்பொழுதும் சிதறடிப்பவைகளாகவே இருந்து வருகின்றன. ஒவ்வொரு தேசிய இனமும் எவ்வாறு தனித்துவமானவையோ அதேபோன்று இலங்கைத் தமிழரும், விடுதலைப்புலிகளும் தனித்துவமானவர்கள். ஆகையினால், புலிகள் பற்றிய போர்த் தந்திரங்கள், யுகதிகள் எல்பவும் தனித்துவமானவை. ஆகையினால் அவைபற்றிய குறிப்பும் விடுதலைப் புலிகளினாலேயே பதியப்பட வேண்டும். இவற்றை அந்நியபோர் விதிமுறைப் புத்தகங்களில் கண்டுகொள்ள முடியவில்லை என்பது ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல.

இதேவேளை விடுதலைப்புலிகள் உலகில் உள்ள ஏனைய போராளி இயக்கங்களைவிட வேறுபட்டவர்கள், இவர்கள் எப்பொழுதும் உயிரைத் தற்கொடை செய்யத் தயாராகவுள்ள மன உறுதி படைத்தவர்களாவர். இவர்களின் இந்த மனவுறுதி எதிரிகளுக்கு எப்பொழுதும் பெரும் சவாலாகவேயுள்ளது புலிகளின் போர் யுக்தியைப் பற்றிப் பிரஸ்தாபிப்பவர்கள், தத்துவார்த்த முறையில் வெற்றியளிக்க முடியாத வடிவத்தில் அமைத்த தாக்குதல்களை நடத்தி புலிகள் வெற்றி பெறுகின்றார்கள் எனக் குறிப்பிடுகின்றார்கள். அவ்வாறானால் போர்த்தத்துவம் ஒன்றையே புலிகள் கேள்விக்குரியதாக்கியுள்ளார்கள். இக்கடினப் போர் முறையில் புலிகள் வெற்றி பெறுவதற்கு காரணம், அவர்களின் மனவுறுதியே ஒழிய வேறு எதுவுமில்லை. அதாவது, தமது மனோவுறுதியால் புலிகள் இராணுவ தத்துவங்களையே மாற்றியமைக்கும் நிலையில் உள்ளனர்.

இவ்வாறான எதிரிகளுக்கு சவாலாகவும் தத்துவத்தையே கேள்விக்குரியதாகும் போர்த்தந்திரங்கள் திறன் முறைகள் என்பன விடுதலைப் புலிகள் தலைமைத்துவத்தாலேயே வடிவமைக்கப்படுகின்றன. உலகிலுள்ள விடுதலை இயக்கங்களில் அந்நியரின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளாததும், இரு பெரும் இராணுவங்களுடன் போரிட்டும் போரிட்டுக் கொண்டும் இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் ஆகும். இவ்இயக்கம் சந்தித்தது போன்ற நெருக்கடிகளை சந்தித்து அதிலிருந்து மீண்டுவருவதென்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றாகும். ஆனால், அதிலிருந்து விடுதலைப் புலிகள் மீண்டுவந்தமை அவர்களின் தனித்துவமான போர் யுக்திகளும், சிறப்புமே காரணம் என்பதில் ஐயப்பட ஏதுமில்லை.

---

குடியரசுகளுடன் ராஜீயத் ... ளார்.

சுதந்திரத்தை தாம் வரவேற்பதாகவும், இந்த நாடுகளின் சுதந்திரத்தை தாம் அங்கீகரிப்பதாகவும், இதற்கு முன்னோடியாக அந்தக் குடியரசுகளுடன் ராஜதந்திர உறவுகளை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

ஏப்ரல் 27 ஆம் திகதிய பிரகடனத்தின் அடிப்படையில் இந்தியா இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பானுக்கும், ஜேர்மனிக்கும் பாதுகாப்புச் சபையில் இடமளிக்க வேண்டும் எனவும் கெடுபிடி யுத்தத்தைச் சம்பிரதாயபூர்வமாக முடித்துவைத்துப் பேசிய முன்னாள் சோவியத் அதிபர் கொர்பசேவ் தெரிவித்தார்.

46 ஆண்டுகளுக்குமுன் வின்ஸ்டன் சர்ச்சில் தனது பிரசித்திபெற்ற இரும்புத்திரை சொற்பொழிவை நிகழ்த்திய அதே இடத்தில் மிக்செயில்

னப்படுத்தி, உலக அரசாங்கம் ஒன்றின் சாத்தியத்தையும் வெளியிட்டார்.

உலக சமூகத்தின் சகல அங்கத்தவர்கள் பங்குகொள்ளும் ஏதாவது ஒரு உலக அரசாங்கத்தின் அவசியம்பற்றி இப்போது உணரப்பட்டு வருகின்றது என்றும், 2000 ஆம் ஆண்டில் ஆயுத ஏற்றுமதி உலகளாவியரீதியில் தடை செய்யப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# ரொக்கட் தொழில் நுட்பம் ஆக்கபூர்வத் திட்டங்களுக்கே

## -சரத் பவார்-

(புதுடில்லி)

இந்தியாவில் ராக்கட் தொழில் நுட்பம் ஆக்க பூர்வமான திட்டங்களுக்கு மட்டுமேபயன்படுத்தப்படும் என்றும் ராணுவத்திற்கோ அல்லது அழிவு வேலைகளுக்கோ பயன்படுத்தப்பட மாட்டாது என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார். மகராஸ்டிரா மாநிலத்திலுள்ள தானேயில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சரத் பவார் மேலும் கூறுகையில்,

தொலைத்தொடர்பு பணிகள் பருவ நிலைகளைக் கவனித்தல் போன்ற ஆக்கபூர்வமான வேலைகளுக்கு மட்டுமே ராக்கட் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் என்றும் இந்தியா ரொக்கட் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து உலகநாடுகள் கவலை கொள்ள வேண்டியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

## தமிழக சட்டசபை-நீதித்துறைமோதல்

# நெருக்கடியை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்

(டில்லி)

பத்திரிகையாளரின் உரிமை மீறல் நடவடிக்கை காரணமாக தமிழ்நாடு சட்டப் பேரவைக்கும் நீதித்துறைக்குமிடையே நடைபெறும் மோதலைத்தடுக்கச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும்எடுக்கப்படும் என்று நேற்று முன்தினம் ராஜ்யசபாவில் உறுதியளிக்கப்பட்டது.

கேள்வி நேரத்தின் போது இந்தத் தகவலைத் தெரிவித்த மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் பி. ஆர். குமாரமங்கலம், இதற்கான வழிகளைக் கண்டறிவதற்காக சட்ட அமைச்சர் விஜெயபாஸ்கரரெட்டி லோக்சபா சபாநாயகரைச் சந்தித்துப் பேசுவார் என்றும் கூறினார்.

# அடக்கு முறைப் போக்கை தமிழக அரசு கைவிட வேண்டும்

தமிழக அரசு பத்திரிகையாளர்கள் மீதுஅடக்குமுறைப் போக்கை மேற்கொள்வதாகக் கூறி அந்தப் போக்கைக் கைவிடவேண்டும் என்று கேரள உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை முரசொலி பத்திரிகை ஆசிரியர் செல்வம் கைது செய்யப்பட்டமைக்கு தமிழகபத்திரிகையாளர்சங்கத்தின் கூட்டுச் செயல் கமிட்டி கண்டனம் தெரிவித்துள்ளது. முரசொலி ஆசிரியர் செல்வத்தை கைது செய்ய வேண்டாமென சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவிடம் நேரில் தொடர்புகொண்ட பின்னரும் அவர் கைது செய்யப்பட்டமைக்குகடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## இந்திய- ரஷ்ய விண்வெளி நிறுவனம்

# வர்த்தகநடவடிக்கைகளுக்கு அமெரிக்காவில் தடை

(வாஷிங்டன்)

இந்தியா மற்றும் ரஷ்யாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் அமெரிக்காவில் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இரண்டாண்டுகள் தடை விதித்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் நிறுவனமான இளாவோகோஸ் மாஸையும், இந்தியாவின் விண்வெளி ஆய்வு ஸ்தாபனத்தையுமே அமெரிக்கா தனது தடைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதாகும்.

இரண்டு ஆண்டுகளுக்கு விண்வெளித் தொழில் நுட்பம் வழங்கும் ஒப்பந்தம் எதுவும் அவற்றுடன் செய்து கொள்வதை இது தடை செய்யும்.

ரஷ்யா இந்திய விண்வெளி தொழில் நுட்பத்தை பெற்றுக் கொள்ள ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டதை அடுத்தே அமெரிக்கா இந்த முடிவை எடுத்ததாக அமெரிக்க வெளியுறவு அதிகாரி தெரிவித்தார்.

இந்த தடைகளின் பிரகாரம் வரும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த இரண்டு ஸ்தாபனங்களுக்கும் தொழில் நுட்பம் அல்லது சாதனம் எதனையும் அமெரிக்கா ஏற்றுமதி செய்யாது என்றும், அவற்றிடம் இருந்து இறக்குமதியும் செய்யாது என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்ப கழக இயக்குநர் திரு. சாமி;

இந்தியா தனது சொந்த தொழில் நுட்பம் மூலம் விண்வெளி விஞ்ஞானத்தில் சாதனை படைக்கக் கூடிய நிலையை எட்டியிருப்பதைக் கண்டு அமெரிக்கா அச்சம் அடைந்திருப்பதாலேயே இவ்வாறு நடந்து கொண்டது" எனத் தெரிவித்தார்.

# அமெரிக்க முடிவுக்கு இந்திய பாராளுமன்றம் கண்டனம்

(புதுடில்லி)

இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் விண்வெளித் தொழில் நுட்பத்தைப் பரிமாறிக் கொள்வதற்கு அமெரிக்க அரசு இரண்டாண்டுகளுக்குத் தடை விதித்திருப்பதற்கு இந்தியப் பாராளுமன்றம் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.

விண்வெளித் தொழில் நுட்பத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்திருந்ததையடுத்து, அமெரிக்கா இத்தகைய கடுமையான நிலையை எடுத்திருப்பதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஜனதா தள் உறுப்பினர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அமெரிக்காவிற்கு எதிரான கண்டனக் குரலைப் பாராளுமன்றத்தில் வெளியிட்டனர்.

ஈழநாதம்

## உலகசூழல்தினம்

உலக சூழல் பாதுகாப்புத் தினம் வரும் யூன்மாதம் 5ஆம் திகதி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து செப்டெம்பர் 18ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை உலகின் நூறு நகரங்களில் சூழல் பாதுகாப்பிற்காக அவை சுத்திகரிக்கப்படும்.

# நிரந்தர இணைப்பு ஏற்புடையதல்ல; சிங்கள கட்சிகள் கருத்துடன்பாடு

(கொழும்பு)

''இணைப்பு நிரந்தரமானதாக இருக்கக்கூடாது என்பதே எனது அபிப்பிராயமாக எப்போதும் இருந்திருக்கிறது. முஸ்லிம்கள் கூட இணைப்பை விரும்பமாட்டார்கள். தெரிவுக்குழு அதன் அறிக்கையை வெளியிட்டதும் எனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவேன்''

இவ்வாறு புனர்வாழ்வு புனரமைப்பு சமூக சேவைகள் அமைச்சர் பி. தயாரத்தினா வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து கருத்து வெளியிடும்போது தெரிவித்தார்.

இதுகுறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா ஜனநாயக ஐ.தே. முன்னணி தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்கா சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் சிங்கள பாதுகாப்பு இயக்கத் தலைவர் காமினி ஜெயசூரியா ''ஹெல உறுமய'' இயக்க உறுப்பினர் எஸ்.எஸ். குணசேகரா முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

### அநுரா பண்டாரநாயக்கா

''பல்வேறு மாற்றுத் திட்டங்களை சுதந்திரக் கட்சி இப்போது பரிசீலனை செய்து வருவதால் எந்தவிதமான விசேட யோசனைகள் குறித்தும் கருத்து கூற நான் விரும்பவில்லை. இதுதவிர இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பல்வேறு வகைப்பட்ட யோசனைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கும் தெரிவுக் குழுவிற்கு தலைவராக சுதந்திரக் கட்சி எம்.பி ஒருவரே இருக்கின்றார்'' என்று தெரிவித்தார்.

### காமினி திசாநாயக்கா

''பிரச்சினையின் ஆரம்பமும் முடிவும் பிரபாகரன் என்பதே உண்மையான விடயம். அவர் இன்றி எந்தவொரு தீர்வும் இல்லை. அவர் ஈழத்திற்காகப் போராடுகின்றார். இந்தப் பின்னணியிலே இணைப்பு பற்றியோ துண்டிப்பு பற்றியோ பேசுவது பொருத்தமானதல்ல. சமாதானத்திற்கான ஒரு பற்றுறுதி இல்லாமல் தீர்வு எதையும் காணமுடியாது. புலிகளிடம் அத்தகைய பற்றுறுதியை காண முடியவில்லை'' என்று குறிப்பிட்டார்.

### அஷ்ரப்

''நிபந்தனையுடனான இணைப்பு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது என்றபோதிலும் நிரந்தர இணைப்பை நாம் எதிர்க்கிறோம். வட - கிழக்கில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எந்த ஒரு அநீதி இழைக்கப்படுவதையும் நாம் தடுக்க வேண்டும்'' என்றார்.

### ஜெயசூரியா

''மக்களில் பலர் இணைப்புக்கு எதிரானவர்களாக இருக்கின்றார்கள். இணைப்பு விவகாரத்தினால் உருவான சர்ச்சையை அடுத்தே ஜே.ஆர். அமைச்சரவையிலிருந்து நான் ராஜினாமாச் செய்தேன். ஐந்து வருடங்கள் கழிந்துவிட்டன. தற்காலிக இணைப்பு இன்னமும் தொடர்ந்து இருக்கின்றது. வடக்கிற்கு அண்மையில் சென்ற பௌத்த குருமார் குழு தற்காலிக இணைப்பு இன்னமும் மூன்று வருடங்களுக்கு தொடருவதற்கான யோசனையை புலிகளிடம் முன்வைத்ததை அறிந்து நான் ஏமாற்றம் அடைந்தேன். மகா சங்கத்தினரில் பெரும்பான்மையானவர்களின் கருத்திற்கு இது முரணானதாகும். நிரந்தரமான தீர்வொன்றைக்காண இது உதவப்போவதில்லை. இணைப்பை எதிர்ப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு பிரகடனம் செய்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். பிரதான எதிர்க்கட்சிகள் இணைப்பை எதிர்க்கின்றன. இதுவிடயத்தில் அரசாங்கத்திடம் இருந்து தெளிவான அறிக்கை ஒன்றை முழுநாடுமே எதிர்பார்க்கிறது. எந்தவொரு தீர்வுத்திட்டத்திற்கும் முன்னோடியானதாக இணைப்பு இருக்க வேண்டுமென தமிழ்க் கட்சிகள் விடாப்பிடியாக நிற்பது எனக்கு கவலையைத் தருகின்றது'' என்றார்.

### குணசேகரா

''இணைப்பை எது விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. நிரந்தர இணைப்பை தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் வலியுறுத்துவது நியாயமான தீர்வொன்றைக்காண்பதில் அவற்றுக்கு அக்கறையில்லை என்பதையே காட்டுகிறது. கிழக்கில் வாழும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு மேலாக நிரந்தரமான மேலாதிக்கத்தை தங்களுக்கு தரக்கூடிய தீர்வொன்றையே தமிழ்க் கட்சிகள் நாடுகின்றன. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டுமெனப் பேசும் இக் கட்சிகள் கிழக்கிலுள்ள சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அதே உரிமை இருக்கவேண்டும் என்று ஏற்றுக் கொள்வதாக தெரியவில்லை. சிறுபான்மையினருடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள சிங்களவர்கள் தயாராயில்லை எனக் குறை கூறும் இத் தமிழ்க்கட்சிகள் கிழக்கிலுள்ள சிங்களவர்களுடனும் முஸ்லிம்களுடனும் அதிகாரத்தைப் பகிர விரும்பவில்லை'' என்றார்.

### ஜே.ஆர்.

''நிரந்தர இணைப்புக்கு முன்னதாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு உடன்படிக்கையில் ஏற்பாடு இருக்கிறது. ஆனால் இந்த விவகாரங்கள் குறித்து பேசுவதற்கு இப்போது நான் விரும்பவில்லை'' என்றார்.

வின்னர் கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

#### கோப்பாய்

## ஆசிரியர் பயிலுநர்களால் விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் ஏழு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் தமது வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் கலாசாலைக்குச் செல்லாது தமது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப் படும்வரை பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளனர்.

இவர்களால் இப்பகிஷ்கரிப்பிற்காக முன்வைக்கப்பட்ட காரணங்கள் வருமாறு:

காசோலை முறையை மாற்றி சம்பளத்தைப் பணமாக வழங்க அதிபர் மறுத்தமை, கலாசாலை விடுதி மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை, மலசலகூட வசதி செய்து...

#### இந்திய லோக்சபாவில்

## கூட்டு கடற்படை ஒத்திகையை கைவிட உறுப்பினர் கோரிக்கை

(டில்லி)

அமெரிக்கா, இந்தியாவின் விண்வெளி தொழில் நுட்ப வர்த்தகத்திற்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய பாராளுமன்றம், இராஜ்சபா ஆகிய இருசபைகளிலும் பலத்த கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, இந்து சமுத்திரத்தில், இந்திய - அமெரிக்க கூட்டு கடற்படை ஒத்திகையை கைவிட வேண்டும் என இரு அவைகளிலும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

(முன்னர் வந்தசெய்தி உள்ளே)

#### புலிகள் பற்றி இந்தியாவிற்கு

## பயனுள்ள தகவல்கள் சிறிலங்கா அளித்துள்ளதாம்

(டில்லி)

தலைவர் பிரபாகரன் பற்றியும், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் பற்றியும் பல பயனுள்ள தகவல்களை சிறிலங்கா அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் கையளித்திருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்து, பற்றிரியாட், றிபியூன் ஆகிய பத்திரிகைகள் வெளியிட்டிருக்கும் இச்செய்தியில் மேலும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்வது பற்றிய திட்டம் வகுக்கப்பட்டபோது இடம் பெற்ற சம்பவங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொல்பொருள் கண்டுபிடிப்பு

(சென்னை)

சிதம்பரனார் மாவட்டம் பொற்கை கிராமத்தில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆளுயரத் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பாண்டியர் காலத்தைச் சேர்ந்தது என்றும், இறந்த வீரர்களின் உடல்களைப் புதைக்க பயன்படுத்தப்பட்டது என்றும் சிதம்பரனார் மாவட்ட அரும்பொருட்காட்சியகப் பொறுப்பாளர் கூறியுள்ளார்.

#### இன்றைய

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

#### ராஜீவ் கொலை

## விசாரணைக்கு உதவ உயர் அதிகாரி நியமனம்

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஜெயின் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு உதவ பொலிஸ் மா தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் நியமிக்கப் படவுள்ளார்.

இத்தகவலை புதுடில்லி அதிகார வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பான விசாரணைகளை நடாத்திவரும் விசேட விசாரணைப் பிரிவின் முடிவுகள் குறித்து ஜெயின் ஆணைக்குழு பரிசீலித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலை

(குருநகர்)

ஆறு பிள்ளைகளின் தந்தையான மனநோயாளி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் (11-5-92) முற்பகல் குருநகர் றெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியில் நடைபெற்றது.

அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (சின்னையா - வயது 41) என்னும் அதே இடத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

குருநகர் கிழக்கு கிராம சேவையாளர், தமிழீழக் காவல் துறையினர் புலன் விசாரணைகளை நடத்தினர்.

## எழுத்தாளர் 'சாவி' கைதாகி விடுதலை

(சென்னை)

பிரபல தமிழ் எழுத்தாளர் சாவி சென்னையில் கைதுசெய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

'சாவி' சஞ்சிகையில் வெளிவந்த அட்டைப் படம் தொடர்பாக கொடுக்கப் பட்ட புகாரையடுத்து இவர் கைது செய்யப்பட்டதாக தமிழ் நாடு பொலிசார் தெரிவித்தனர்.

எழுத்தாளரான சாவியைக் கைது செய்தது கண்டனத்துக்குரியது என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் பேசிய கருணாநிதி, 'சாவி' பத்திரிகை காரியாலயம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த இந்திய தேசிய ஜனநாயக மாதர் மன்றத்தின் தலைவியான மைதிலி சிவராமன் கொடுத்த வரதட்சனைக் கொடுமை பற்றிய புகார்களை விசாரணை செய்யாத பொலிஸார், மைதிலி கொடுத்த புகாரை வைத்துக் கொண்டு சாவியைக் கைது செய்துள்ளனர். இதற்கு மைதிலியே அதிருப்தி தெரிவித்திருப்பதைக் கருணாநிதி சுட்டிக்காட்டினார்.

பத்திரிகை ஆசிரியரைக் கைது செய்தது சட்ட சபை சரித்திரத்திலேயே முதலாவது சம்பவம் என்று குறிப்பிட்ட கருணாநிதி ஆரம்பத்திலேயே பிரச்சினையைப் பரந்த மனப்பான்மையுடனும் பெருந்தன்மையுடனும் அணுகியிருந்தால் உச்ச நீதிமன்றத்துக்கும், தமிழகச்சட்ட சபைக்கும் ஏற்பட்டிருக்கும் இப்போதைய மோதலைத் தடுத்திருக்கலாம் என்றார்.

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## A/L கலை, வர்த்தகம்

**93** பிரிவு - 3 காலை
ஆரம்பம்: 16-5-92 8.00 மணி

பொருளியல் — திரு கலாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம
அளவையியல் — திரு. சுப்பிரமணிய
தமிழ் — திரு. முழந்தை
இந்துநாகரிகம்)
இந்துசமயம் )— திரு காரை சுந்தரம்பிள்ளை
புவியியல் — திரு. குணராசா
அரசியல் — திரு. ஜெயகாந்தன
வரலாறு — திரு. சிறிதரன

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி/4409)

கிராம உத்தியோகத்தர்
போட்டிப் பரீட்சைக்கான மாதிரி

## வினாவிடை நூல்

★ தமிழ்மொழி, பொது அறிவு, விவசாயம் ஆகிய மூன்று வினாத்தாள்களுக்குமான ஒரே நூல்.

★ திரு. க குணராசாவின் வழிகாட்டலில் தயாரானது சொற்ப பிரதிகளே கொழும்பிலிருந்து வந்துள்ளன.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி 4410)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கோரிக்கைகள் அனைத்தும்

### புலிகளை

செய்தால் அதை எதிர்த்து போராட்டம் நடாத்துவோம் என தெரிவித்தார்.

காயம் பட்டுவரும் விடுதலைப் புலிகளுக்கு நாம் கட்டுப் போடாமல் உடலில் பாய்ந்த குண்டை நாம் எடுக்காமல் வேறு யார் உதவுவார்கள். அவர்கள் இங்கு யாரையும் சுடுவதற்கு வரவில்லை காயம் பட்ட புண்ணுக்கு மருந்து தடவி விடுவார்கள் என்று நம்பி உதவி கேட்டு வருகிறார்கள் உதவுவது நம் கடமை.

இனிமேல் போரில் காயமடையும் விடுதலைப் புலிகள் என்னிடம் வாருங்கள் நான் ஒரு டாக்டர் வைத்தியம் செய்கிறேன் நான் தமிழன் என் ரத்தமும் உங்கள் ரத்தமும் ஒன்று என அவர் தெரிவித்தார்

### வீரச்சாவு

புரம் உடையார்கட்டு. முல்லைத்தீவு) இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### புலிகள்

மைப்பொறுத்தவரை இதற்கு ஒரு சுருக்கமான பதில் சொல்வதானால் இந்தியாவின் இறுமாப்பும் ஒற்றைப் பார்வையுமே பிரதானம என்றுதான் கூற வேண்டும்'' இவ்வாறு இந்த இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர் மேஜர் சங்கர் பாதுரி. மேஜர் ஜெனரல் கரிபசே ஆகியோரே கூட்டாகச் சேர்ந்து இந்த நூலை எழுதியுள்ளனர்.

### குமணவில்

கும் இயந்திரங்களையும் அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு அறிவித்துள்ளார். (ச)

மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை, மலசலகூட வசதி செய்து தரப்படாமை, குடிநீர் வசதி செய்து தரப்படாமை, போதிய வகுப்பு வசதிகள் இல்லாமை. கலாசாலை வளங்கள் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமை. மாணவர்களுடன் அதிபர் நடந்து கொள்ளும் பிழையான அணுகுமுறை.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(சாவகச்சேரி)

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது இதற்கு பிரதம விருந்தினராகசாவகச்சேரி நகரக் கொத்தணி அதிபர் திரு. க சிவபாதசுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக நகர சபை ஆணையாளர், திரு. த. நவரத்தினராசாவும். தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு புரட்சியும் கலந்து கொண்டனர், (35)

### தமிழ் மக்களின்

நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவும் வந்திருந்தார்.

கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் வரவேற்றார்.

தொடர்ந்து பேசிய ஆயர் றேமன் பீரிஸ் "தென் பகுதி மக்களுக்கு உண்மை தெரிவதில்லை அரசு மூடிமறைத்து பொய்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறது. நாம் இங்குள்ள நிலைமையை மக்களுக்கு எடுத்துச் சொல்வோம்'' என்றார்.

பேராயர் நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவும் உரை நிகழ்த்தி முடிவில் கலாமன்றத்தைச் சேர்ந்தவர்களுக்கு நலன் வேண்டி ஆசீர்வதித்தார். அதன் பின் இரு ஆயர்களும் யாழ் கோட்டையைப் பார்க்கச் சென்றனர். (21)

காவல் துறையினர் புலன் விசாரணைகளை நடத்தினர். (21)

## தையல் பயிற்சி வகுப்பு

(யாழ்பபாணம்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினால் நடத்தப்படும் மூன்றாம் கட்டத் தையல் பயிற்சி வகுப்பு எதிர்வரும் ஆனி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

பயிற்சி பெற விரும்புபவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. போராளி குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவசப் பயிற்சி வழங்கப்படவுள்ளது

## வைத்தீஸ்வர கல்லூரி மாணவன் முதலிடம்

( கொழும்பு )

இலங்கை முதிர்விலுதவி அமைப்பு நடத்திய அகில இலங்கை கட்டுரைப் போட்டியில் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய 11ஆம் ஆண்டு மாணவன் கே. ஆனந்தா முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

கொழும்பு ராஜகீனிய கனிஷ்ட வித்தியாலயத்தில் வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள விழாவில் இவருக்கு 2,000 ரூபா ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

### யாழ். பல்கலை

தொடர்பு கொண்டுள்ளனர். மேலும் 1990-91 கல்வியாண்டு முதல் ஒரு மாணவருக்குரிய புலமைப்பரிசில் பணம் 1000 ரூபா என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

டம் செய்த இந்திய தேசிய ஜனநாயக மாதர் மன்றத்

போதைய மோதலைத் தடுத்திருக்கலாம் என்றார்.

# கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கையில் அழியும்நிலை

(கொழும்பு)

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் அழியும் நிலையில் உள்ளது. அரசு திறந்த வர்த்தகக் கொள்கையின் அடிப்படையில் தனியார் துறைக்குச் சீனியையும் அரிசியையும் வழங்கியதைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்களின் வருமானத்தில் முப்பது விகிதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது மா வியாபாரத்தையும் தனியார் துறைக்கு விடுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் வருமானத்தில் இன்னுமொரு நாற்பது விகிதம் துண்டு விழும். அத்துடன் சங்கங்களிடமிருந்து விற்பனை வரியை அறவிட்டதும் கூட்டுறவு இயக்கம் தானாகச் செத்துவிடும்

மத்திய மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

டி. எஸ். சேனநாயக்கா ஞாபகார்த்த பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினை பற்றி நடாத்தப்பட்ட கருத்தரங்கில் அவர் இவ்வாறு கூறினார்.

மத்திய மாகாணத்தில் மாத்திரம் 6000 கூட்டுறவுத் தொழிலாளர் தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இத் தொழிலாளரின் உழைப்பில் தங்கியிருக்கும் சுமார் 30,000 பேர் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயற்படுத்தப்படும் அரசின் ஜனசவியத் திட்டம், பாடசாலை மாணவர் மதிய உணவு வழங்கல் திட்டம், உணவு முத்திரை, மற்றும் கிராமிய வங்கிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சுயவேலை வாய்ப்பு ஆகியன சீர்குலைந்து போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

### வீரமுனை,

களால் சூழப்பட்ட இக்கிராமம் தமிழ்கிராமங்களில் இருந்து அதிகளவு தூரத்தில் இருக்கிறது.

இவர்கள் சிங்களவராலும் முஸ்லிம்களாலும் அச்சுறுத்தப் பட்டதாலும் போதிய உணவு வசதிகளில்லாததாலும் அங்கிருந்து வெளியேற முயன்றனர். ஆனால் அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதை பொலிசார் தடுத்துவிட்டனர்.

சிறிது சிறிதாக அங்கிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர் அவர்களை வீரமுனைக்கு செல்லுமாறு சிறிலங்கா இராணுவத்தினர் மிரட்டி வருகின்றனர்.

## யாழ்.செயலகக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

1992 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பதற்கான கூட்டமொன்று நேற்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து இலாகாக்களின் தலைவர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கு 150 இலட்சரூபாவும் கிளிநொச்சி மாவட்டதிற்கு 50 இலட்ச ரூபாவும் ஒதுக்குவதென தீர்மானிக்கப்பட்டது. (ச